<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.86/2021**

Date: 14.07.2025.

வா.சா.1 - திரு. பிபின் ராஜ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன ரோஸ்லெட்யை எனக்கு தெரியும். எனக்கு அவர் தூரத்து உறவினர், நாங்கள் ஒரே ஊர்காரர்கள். ரோஸ்லெட் குளச்சல் VKP பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார் என்றால், சரிதான். நான் அந்த பள்ளியில் படிக்கவில்லை. எனக்கு தெரிந்தவரை இறந்துபோன ரோஸ்லெட்டிற்கு சமுதாயத்தில் நல்ல பெயர் இருந்தது என்றால், சரிதான். ரோஸ்லெட்டின் மகள், மகன்கள், மற்றும் மருமக்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். ரோஸ்லெட்டின் வீடு எனது வீட்டிற்கு 3 பர்லாங் தள்ளியிருக்கும். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் ரோஸ்லெட் தனது மருமகன், இளைய மகள் மாலினியின் கணவருக்கு வேண்டி பணம் கடன் வாங்கியதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். 4ம் பிரதிவாதியின் கணவர் ரோஸ்லெட் வழியாக கடன் வாங்கியதாக குறிப்பிடுகிறேன் என்றால், சரிதான். நான் 4ம் பிரதிவாதியின் கணவரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் ரோஸ்லெட்டிற்கும், அவரின் கணவருக்கும் நோட்டீஸ் அனுப்பினேன். மற்ற பிரதிவாதிகளுக்கு நான் நோட்டீஸ் அனுப்பவில்லை என்றால், சரிதான். அந்த அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும்போது 3ம் பிரதிவாதியின் சொத்தினை பற்றுகை செய்யவேண்டும் என்று கோரி இடைகால மனு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அந்த சொத்து பற்றிய விபரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால், அவருடைய அம்மா

எனது ஊர் காரர். அந்த சொத்து 10 1/2 சென்ட் இருக்கும், சரியாக தெரியவில்லை. சொத்தின் சர்வே எண் எனக்கு நினைவில் இல்லை. அந்த சொத்து, முதலில், அவரின் அம்மாவின் பெயரில் இருந்தது. அந்த சொத்து 3ம் பிரதிவாதிக்கு அவருடைய தகப்பனார் கொடுத்த சொத்து என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த இ,ம.எண்.1/2021 யை நான் முன் நடத்தவில்லை என்றால், சரியல்ல. அந்த சொத்தின் பத்திரத்தை இந்த வழக்கில் நான் குறியீடு செய்திருக்கிறேன், அந்த பத்திரத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து மனு தாக்கல் செய்து பெற்றேன். மற்ற பிரதிவாதிகளின் சொத்தினை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால், சரிதான். பின்னிட்டு 3ம் பிரதிவாதியின் மற்றொரு சொத்து 10 1/2 சென்டினை இந்தவழக்கின் வழக்குரையில் சேர்த்தேன் என்றால், சரிதான். 10 1/2 சென்டு சொத்தானது 3 1/2 மற்றும் 7 சென்டுகள் என்று இரண்டு கண்டங்களாக உள்ள விபரம் எனக்கு தெரியாது. 3 1/2 சென்று 3ம் பிரதிவாதி விலைக்கு வாங்கியது என்றால், அதுவிபரம்எனக்கு தெரியாது. 3 1/2 சென்டை 2014ல் விலைவாங்கிய விபரம் எனக்கு தெரியாது. 7 சென்டு சொத்து 2012ல் 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் மூலமாக கிடைத்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 10 1/2 சென்றானது ரோஸ்லெட்டின் வாரிசுரிமை அடிப்படையில் இந்த 3ம் பிரதிவாதிக்கு கிடைக்கவில்லை என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. 3ம் பிரதிவாதியின் மிரட்டி பணம் பெறும் உள்நோக்கத்துடன் தான் நான் இந்த வழக்கு அவருக்கு எதிராக தவறுதலாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. நான் ரோஸ்லெட்டிற்கு ரூ,5,50,000/- கடன் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். அதில் ரூ.2,00,000/- எனது நண்பர்

ஜெயகுமாரிடமிருந்து நான், கடன் வாங்கி கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால். சரிதான். ஜெயகுமார் எனது ஊர்காரர். அவர் பிளம்பிங் வேலை செய்கிறார். நான் ஜெயகுமாருடன் கூட்டு சேர்ந்து , மோசடியாக இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. ரோஸ்லெட் நோய்வாய் பட்டு இறந்தார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. என்னிடம் பணம் கடன் வாங்குவதற்கு ரோஸ்லெட் வரும்போது 3ம் பிரதிவாதி அவரை நடத்தி தான் அழைத்து வந்தார். இருசக்கர வாகனம் அல்லது காரில் வரவில்லை. எனது வழக்குரையில் ரோஸ்லெட் கடன் வாங்கிய தேதி 15.04.2019 என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். 15.04.2019 தேதியன்று நான் குறிப்பிடுவதுபோல ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றால், சரியல்ல. ரோஸ்லெட் 100 ரூபாய் பத்திரத்தில் கையெழுத்து செய்தார். அந்த பத்திரத்தில் ஒரு பக்கம் தான் இருந்தது. அந்த Stamp Paper யை ரோஸ்லெட் தான் வாங்கிகொண்டு வந்தார். வா.சா.ஆ–2 கடன் பத்திரம் நானும், ஜெயகுமாரும் சேர்ந்து மோசடியாக வழக்கிற்காக தயார்செய்திருக்கிறோம் என்றால், சரியல்ல. ரோஸ்லெட் பலபேரிடம் கடன் வாங்கியிருக்கிறார். 3ம் பிரதிவாதிக்கு ரோஸ்லெட்டின் வாரிசுரிமை அடிப்படையில் எந்த சொத்தும் வரவில்லை என்றாலும், அதனால் அவர் இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்றாலும், சாட்சி பதில்ஏதும் கூறவில்லை. 1ம் பிரதிவாதியோ, 3ம் பிரதிவாதியோ எனக்கு எந்த தொகையும் திருப்பி தர கடமைப்பட்டவர் அல்ல என்றால், சாட்சி பதில்ஏதும் கூறவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.